P.R.NO: 02. நாள்: 02.01.2018.

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பொது மற்றும் தனியாருக்கு பாத்தியப்பட்ட இடங்களில் விளம்பர பலகைகள், சுவர் விளம்பரங்கள் மற்றும் திரைச்சீலை விளம்பரங்கள் பொதுமக்களின் பார்வைக்கு முழுமையாகவோ, பகுதியாகவோ செய்யப்படும் விளம்பரத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விளம்பர பலகைகள் உரிமம், மற்றும் விளம்பர வரிவிதித்தல், வசூலித்தல் விதிகள் 2003-ன்படி அதற்குரிய கட்டணங்களை செலுத்தி உரிய படிவத்தில் மாவட்ட நிர்வாகத்திடம் விண்ணப்பித்து முறையான அனுமதி பெற்ற பின்னரே வைக்க வேண்டும். அனுமதி வழங்க கோரும் விண்ணப்பத்துடன் விளம்பர பலகை அமைய உள்ள இடம் தனியார் இடம் எனில் நில உரிமையாளரிடமிருந்தும், நெடுஞ்சாலை துறை இடம் எனில் உதவி கோட்டப் பொறியாளர் நிலைக்கு குறையாத அலுவலர் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான இடம் எனில் சம்பந்தப்பட்ட ஆணையர்/ செயல்அலுவலர்களிடமிருந்தும், தடையின்மைச் சான்று பெற்றும், போக்குவரத்திற்கும், பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதற்கு அந்தந்த பகுதி துணை காவல் கண்காணிப்பாளர் நிலைக்கு குறையாத அலுவலரிடமிருந்து ஆட்சேபனையின்மை சான்று பெற்றும் உரிமம் வழங்குவதற்குரிய கட்டணமாக ரூபாய் 500/ஐ செலுத்தியதற்குரிய செலானுடன் விளம்பர பலகை அமைக்கப்பட உள்ள இடங்களின் வரைபடத்துடன்(TOPO Sketch) விண்ணப்பிக்க வேண்டும்.

அவ்வாறு விளம்பர பலகை வைக்க வழங்கப்படும் உரிமம் மார்ச் 31-யுடன் முடிவடையும் 3 வருட காலங்களுக்கு செல்லத்தக்கதாகும். விளம்பர பலகைகள் வைக்க வழங்கப்படும் உரிமத்துடன் அரசாணை எண்.47, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்: 26.06.2003-ன்படி ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தக்கவாறு செலுத்தவேண்டிய விளம்பர வரி நிர்ணயம் செய்து வழங்கப்படும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் விளம்பர வரியினை ஒவ்வொரு ஆறு மாதம் காலம் துவங்கும் 30 தினங்களுக்குள் செலுத்த வேண்டும். சாலையின் குறுக்கே மற்றும் கல்வி நிலையங்கள், வழிபாட்டுதலங்கள், மருத்துவமனை, சாலைமுனைகள், தெரு சந்திப்புகள், நினைவுச் சின்னங்கள், சிலைகள் முன்பாகவும் விளம்பர பலகைகள் வைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. அனுமதி பெறாமல் வைக்கப்படும் விளம்பர பலகைகள், ஆபாசமான / ஆட்சேபகரமான கருத்துகள் கொண்ட விளம்பர பலகைகள் உடன் அகற்றப்படுவதோடு அதற்கான செலவினத்தொகை மனுதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்படும். மேலும் சட்டப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி.

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி